## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அணுசக்தி சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி சூனியமாக காணப்பட்ட கிரயம் ரூபா 65.04 மில்லியனிற்கான 223 விஞ்ஞான உபகரண விடயங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றதுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு, எதிர்பார்க்கும் நிலைமைகள் மதிப்பீட்டை விட வித்தியாசப் படின் அந்த வித்தியாசங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி சூனியமாகக் காணப்பட்ட சொத்துக்கள் இடையே விஞ்ஞான உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட உபகரணங்களின் அட்டவணையை இணங்கஞ் செய்த போது இனங்காண முடியாமல் இருந்த உபகரணங்களை இனங்காண்பதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு குழுவின் பரிந்துரைகளின் மீது தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய காலப் பகுதிகளுக்கான தவறுகள் இறந்த கால அடிப்படையில் மீண்டும் வெளியிடுவதனால் முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் 7 வரிசை விடயங்கள் ரூபா 2,065.4 மில்லியன் தொகையினால் திருத்தப்பட்டிருந்த போதிலும், அந்த திருத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் போது அந்த தவறு சரி செய்யப்படும் என அறிவிக்கின்றேன். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட 475 செயற்படாத உபகரண விடயங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | 2022 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட திருத்த வேலை மேற்கொள்ள வேண்டிய, ஓய்வு பெறச் செய்ய வேண்டிய விடயங்கள் கண்காட்சி விடயங்களுக்காக பயன்படுத்தக் கூடிய மற்றும் அகற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பாக உரிய நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருவதுடன், அவ் அலுவல்கள் முடிவடைந்த | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | பின்னர் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 12.2 மில்லியனுக்கான வெளிநாட்டு மானியம் மற்றும் ரூபா 9.83 மில்லியனுக்கான திறைசேரி மூலதன மானியம் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 106 மற்றும் 107 ஆம் அத்தியாயங்களின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை. | 2023 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என அறிவிக்கின்றேன். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு செயற்திட்டம் ஒன்றின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2019 ஆண்டில் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 81.48 மில்லியன் பெறுமதியான மையப்படுத்தப்பட்ட கதிர்வீச்சுள்ள கழிவுப் பொருள் கலஞ்சியம், அதற்குரிய பௌதீக பாதுகாப்பு முறைமையில் காணப்படும் 83 விடயங்கள் மற்றும் 2017 ஆண்டில் வெளிநாட்டு உதவி என கிடைத்திருந்த ரூபா 1.6 மில்லியன் தொகை பெறுமதியான கதிர்வீச்சு அளவை உபகரணம் ஒன்றினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அந்த கட்டிடத்தின் பெறுமதி தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எழுத்துமூலம் 2023.05.23 திகதியே, அறிவிக்கப்பட்டு இருந்தது. கதிர்வீச்சு அளவை உபகரணங்கள் தொடர்பாக கணக்கீடு செய்வதற்கு தேவையான போதியளவு தகவல்கள் காணப்படாமையால் இது தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு அல்லது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையினால் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் பெறுமதியினை, பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டுதல்/ வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கொபோல்ட் 60 மூலகம் இறக்குமதி செய்வதற்கு உரிய சுங்க குறிப்பின் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய சுங்கக் கட்டணம் ரூபா 34.34 மில்லியன் தொகையாகக் காணப்பட்ட போதிலும் அதனை ரூபா 30.28 மில்லியன் என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 4.06 மில்லியன் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கொபோல்ட் 60 மூலகம் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த வெற்றுப் பாத்திரங்கள் மீள் ஏற்றுமதி செய்யும் போது செலுத்த வேண்டிய சுங்கக் கட்டணம் ரூபா 4.06 மில்லியன் பிழையாக காணப்படுவதனால் கணக்கீடு செய்யப்படாததுடன், அதனை தீர்த்து 2023 ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தவறுகளை திருத்தி சரியான சுங்கக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொபோல்ட் 60 மூலகம் பெறுமானத்தேய்வு ஒதுக்குவதற்காக கடந்த ஆண்டு ரூபா 4.69 மில்லியன் தொகையினாலும் மீளாய்வாண்டின் போது ரூபா 6.9 மில்லியன் தொகையினாலும் குறைவாகக் கணிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் ரூபா 11.59 மில்லியன் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை கெமா நிலையத்தினால் கிடைக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கொபோல்ட் 60 மூலகத்தின் பெறுமானத் தேய்வு செலவு கணக்கீடு செய்யப்பட்டதுடன் தற்போது சரியான பெறுமானத்தேய்வு செலவு இனங் காணப்பட்டிருந்தமையால் 2023 ஆண்டிற்கான கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமானத் தேய்வு எண்ணிக்கையினை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 119 சேவைநாடுனர் நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கியிருந்த 2,762 வெப்ப பிளோஒளி கதிர்வுமானி அட்டை (TLD) களை தொகையினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த TLD அட்டைகளின் ஆக்கபூர்வமான ஆயுட் காலத்ததை மதிப்பீடு செய்ய முடியாமையால் நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்வதற்கு நிறுவனம் தீர்மானிக்கவில்லை. 2023 ஆண்டு முதல் மேற்கூறிய வாடகை அடிப்படையில் வழங்கியிருந்த TLD அட்டைகளுக்காக இருப்புக் கணக்கொன்று மற்றும் இருப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கொன்று கணக்கு பிரிவில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியாயமான பெறுமதியினை மதிப்பீடு செய்து சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2021 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 120.7 மில்லியன் தொகை பெறுமதியான கொபோல்ட் 60 மூலகம் பயன்படுத்தப்பட்டு முடிவடைந்த பின்னர் அப்புறப்படுத்துவதற்காக தேவைப்படும் செலவுகளுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கம் ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | மீள் ஏற்றுமதிக்காக செலவு மதிப்பீடு செய்யப்பட்டு 2023 நிதிக் கூற்றுக்களில் தேவையான நிதியம் ஒதுக்குவதற்காக நடவடிக்கை எடுப்பேன். | அப்புறப்படுத்தும் அலுவல்களுக்கு தேவையான செலவுகளுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | புதிய களனி பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்ட அலகினால் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி ரூபா 0.89 மில்லியன் தொகை பெறுமதியான கணினிகள், தளபாடங்கள் மற்றும் | தற்போது இந்த விடயத்தை உறுதிப்படுத்துவதற்கு சபையிடம் தகவல்கள் காணப்படாமையால் களனி பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு பொறுப்பாக இருந்த அமைச்சிலிருந்து இது தொடர்பாக வினவி அதன்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களை சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அலுவலக உபகரணங்கள் சபையினால் கிடைத்திருந்தவை என காட்டப்பட்டிருந்த போதிலும் சபையின் நிதிக் கூற்றுக்களில் அந்த சொத்துக்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | முன்னைய ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2.43 மில்லியனுக்கான நிகழ்வுநிலை வைப்புத் தொகை வருமானத் தலைப்புகளை இனங்காண முடியாமையால் இனங்காண முடியாத வைப்பு என நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டது. | வைப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக தேவையான தகவல்கள் சேவை நாடுனர் வழங்காமையால் இந்த வைப்பு உரிய ஆண்டிலேயே இனங்காண முடியாமல் இருந்ததுடன் 2023.07.06 திகதி அளவில் இந்த வைப்புத் தொகையில் ரூபா 1,380,455.71 பெறுமதியான வைப்புக்கள் இனங்காணப்பட்டு இருந்தது. மீதித் தொகையை இனங்காண்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது. | நிகழ்வு நிலை பெறுவனவுகள் சரியாக இனங்காணக் கூடியவாறு முறைமையினை முன்னேற்ற வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது விஞ்ஞான ரீதியான உபகரணங்களின் திருத்த வேலை செலவு ரூபா 3.28 மில்லியன் தொகையினை மூலதனப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 0.16 மில்லியன் தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டில் சரி செய்யப்படும். | பெறுமானத்தேய்வு ஒதுக்கம் சரியாக கணித்து கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6 சட்ட, விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் தாபனக் கோவையின் அத்தியாயம் VII பிரிவு 12.2.6 | பதில் கடமை சம்பளம் கொடுப்பனவுக்காக உரிய அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் சபையினால் அவ்வாறான அங்கீகாரம் ஒன்று இன்றி 2020 ஆண்டு முதல் 5 உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமை சம்பளம் என ரூபா 2.41 மில்லியன் | பதில் கடமை சம்பள கொடுப்பனவுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த படியினை செலுத்துவதற்காக அமைச்சின் மூலம் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக விண்ணப்பித்த போதிலும் அமைச்சின் மேலதிக | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன் முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செயலாளர் நிர்வாகத்தினால் இந்த பதில் கடமை கொடுப்பனவு மேற்கொள்வதற்குரிய அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371(2) ஆ மற்றும் (5) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரையுடன் திறைசேரியின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 16 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 நிதி வரையறையை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 2.74 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 09 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 0.26 மில்லியன் முற்பணத் தொகை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தாமல் கட்டுநிதி வழங்கப்பட்ட நாளிலிருந்து 14 நாட்கள் முதல் 79 நாட்கள் வரையான காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | அப்போது நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏதேனும் எரிபொருள் நிலையத்தில் இருந்து எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக முற்பணம் வழங்கப்பட்டது. மேலும் எரிபொருள் விலை அதிகரித்தமையால் ரூபா 100,000 விட கூடிய முற்பணம் வழங்குவதற்கு நேரிட்டது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுவதற்கும் உள்ளக கட்டுப்பாட்டு செய்முறையை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 1994 ஏப்ரல் 20 திகதிய 30/94 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 14.16 மில்லியன் தொகைக்கான வெளிநாட்டு மானிய பெறுவனவுகள் திறைசேரி ஊடாக பெற்றுக் கொள்ளாமல் நேரடியாக சபைக்கு பெறப்பட்டு இருந்தது. | வெளிநாட்டு மூலவள திணைக்களத்தின் ஊடாக வெளிநாட்டு செயற்திட்டங்களுக்கு உரிய வெளிநாட்டு உதவிகள் பெற்றுக் கொள்வதற்காக செய்முறை ஒன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 திகதிய 04/2018 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் மூலம் | நிதியல்லாத சொத்துக்கள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான ரூபா 3,245 மில்லயின் கிரயத்தை | விஞ்ஞான உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் மீள்மதிப்பீட்டு பதிவேடு இடையே | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல் | உடைய நிதியல்லாத சொத்துக்கள் அவ்வாறு பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. | காணப்படும் வித்தியாசங்களை இணக்கஞ் செய்வதற்காக குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் குழுவின் பரிந்துரை மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19.47 மில்லியனிற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 129.49 மில்லியனாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 148.96 மில்லியன் பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மொத்த வருமானம் ரூபா 121.4 மில்லியன் தொகையினால் குறைந்திருத்தல் இந்த பின்னடைவிற்கு முக்கியமான காரணமாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அனுசக்தி சட்டத்தின் 4 (ஐ) பிரிவின் பிரகாரம் சபையினால் இலங்கையில் அமைந்துள்ள கதிர்வீச்சுள்ள கனிய வளங்களின் உளமையை கண்டுபிடித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் 4(அ) பிரிவின் பிரகாரம் தேசிய அபிவிருத்திக்காக கதிர்வீச்சுள்ள கணிய பண்டங்களை பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் கதிர்வீச்சுள்ள கனிய பண்டங்கள் தேசிய அபிவிருத்திக்குப் பயன்படுத்தக் கூடிய செய்முறை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | IAEA இல் தொழிநுட்ப ஒத்துழைப்பு செயற்திட்டம் ஒன்று (SRL/02/009) கீழ் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்துடன் இணைந்து நாட்டில் காணப்படும் இயற்கை கதிர்வீச்சுள்ள வளங்கள் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இங்கு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் உத்தியோகத்தருக்கு தேவையான தொழிநுட்ப அறிவு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் தேவையான உபகரண தொகுதிகளும் வழங்கப்பட்டு இருந்தது. நாட்டில் காணப்படும் இயற்கை வழங்கள் தொடர்பாக தகவல்கள் சேகரித்தல் அந்த பணியகத்தின் பொறுப்பாக காணப்படுவதனால் அதற்குத் தேவையான அணு தொழிநுட்பம் தொடர்பான அறிவு அணுசக்தி சபையினால் தற்போது வழங்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக அவர்களுக்கு எதிர்காலத்தில் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கதிர்வீச்சுள்ள கனிய பண்டங்களுக்கு பெறுமதி கூட்டுவதன் மூலம் அவற்றை நாட்டின் பொருளாதாரத்திற்கு உச்சமட்ட அனுகூலம் ஒன்றினை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு பயன்படுத்தக் கூடிய செய்முறை ஒன்றினை தயாரிப்பதற்குத் தேவையான ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணிப்பீட்டு அலுவல்கள் வசதியாக மேற்கொள்வதற்கு உரிய மட்டம் ஒன்று ஏற்பட்டுள்ளது. கதிர்வீச்சு அவதானிப்புக்காக RPTS பிரிவின் மூலம் தொழிநுட்ப உதவி வழங்கப்பட்டதுடன் மாத்தளை, பல்லேகம, தம்புள்ள மற்றும் எலஹர ஆகிய பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டது. மேலும் கவுடுபெல்லல்ல, நாஉல மற்றும் எலகர பிரதேசங்களில் இனங்காணப்பட்ட மேல் பின்னணிப் பிரதேசங்களில் இடம்சார் கெமா அளவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கெமா நிலையத்தின் செயற்பாட்டிற்காக தேவையான கொபோல்ட் 60 மூலகம் 4 வருடங்களுக்கு ஒரு முறை மீள் வழங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அதற்காக 2013 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை ரூபா 358 மில்லியன் தொகை மாத்திரம் அரசாங்க மானியம் வழங்கப்பட்டிருந்தது. திறைசேரிக்கு செலவு பொறுப்பொன்று ஏற்படாதவாறு கெமா நிலையத்தின் தமது வருமானத்தை பயன்படுத்தி பெறுமானம் குறைவடையும் மூலகங்களை மீள் வழங்கக் கூடியாறு முதலீட்டொன்றுடனான நிதி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் ஒன்று செயற்படாமையால் எதிர்காலத்தில் நிதியம் பெற்றுக் கொள்ளல் கடினமாக இருக்குமென அவதானிக்கப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | திறைசேரி மானியம் பெற்றுக் கொள்ளாமல் தமது வருமானத்தின் மூலம் மூலக மீள்வழங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையினால் நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து வாடகை அடிப்படையில் பெற்றிருந்த தலைமை அலுவலகம் அமைந்துள்ள ஒருகொடவத்தையில் உள்ள காணி புதிய களனி பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக சாட்டப்பட்டிருந்தது. பின்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இலங்கை தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார | மாலபே காணிக்காக ரூபா 181 மில்லியன் செலுத்தப்பட்டு இருந்ததுடச் அச் சந்தர்ப்பத்தில் பழைய காணியில் அனுபவிக்காத காலத்திற்குரிய வாடகை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு போலவே வீதி அபிவிருத்தி அதிகார | குறிப்பிட்ட காணியை விரைவாக சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சபைக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த வேறொரு காணியில் செயற்திட்டத்தின் ஊடாக புதிய தலைமை அலுவலகக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2023 ஜுன் அளவிலும் குறிப்பிட்ட காணியை சட்ட ரீதியாக சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டு சபைக்கு கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக உரிய அமைச்சு உத்தியோகத்தர்களின் தலைமையில் குறிப்பிட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதிலும் இது வரை தெளிவான பதில் ஒன்று கிடைக்கப்படவில்லை. இது தொடர்பாக வரிசை அமைச்சின் செயலாளரின் அறிவுரையின் படி குறிப்பிட்ட அமைச்சுக்களின் செயலாளருடன் கலந்துரையாடல் ஒன்றிற்கு அழைப்பதற்காக விண்ணப்பித்து 2023.01.30 திகதி கடிதம் அனுப்பப்பட்டது. இந்த சிக்கல் தொடர்பாக 2023 மே மாதம் 08 திகதி நடைபெற்ற பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை செயற் குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டு அந்த குழுவிற்கு இந்த சிக்கலை அறிவிக்கும் படி வழங்கப்பட்ட அறிவுரையின் படி அதற்குரிய அறிக்கை ஒன்று அந்த குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 5(உ) பிரகாரம் இலங்கையினுள் தனியார் கதிர்வீச்சு ஏற்றுவீத அளவீட்டு சேவை (TLD) வழங்கும் தனியுரிமை நிறுவனம் அணுசக்தி சபையாகும். இலங்கையில் கதிர்வீச்சு தொழிநுட்பத்தை பயன்படுத்தும் (மருத்துவ மற்றும் கைத்தொழில்) அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள சுமார் 600 நிறுவனங்கள் காணப்படுகின்றது என அணுசக்தி ஒழுங்குறுத்தல் சபையின் அனுமதிப் பத்திர பரிசோதனையின் போது | சபையினால் அந்த சேவைக்காக இதுவரை பதிவு செய்யப்படாத அனுமதிப் பத்திரங்கள் தொடர்பாக தலைவர்கள் மட்டத்தில் கலந்துரையாடுவதற்காக எழுத்துமூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதுடன், சேவையினை பெற்றுக்கொள்ளாத நிறுவனங்கள் தொடர்பாக தகவல்கள் கடிதம் ஒன்றின் மூலம் சபையினை | ஒழுங்குறுத்தல் சபையுடன் தொடர்புபட்டு அனைத்து அனுமதிப் பத்திரதாரர்களுக்காக கதிர்வீச்சு ஏற்பு வீத அளவீட்டு சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. எனினும் சபையினால் அவற்றில் 206 நிறுவனங்களுக்கு மாத்திரமே சேவை வழங்கப்பட்டிருந்தது. அதன் படி அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள 400 நிறுவனங்களுக்காக சபையினால் சேவை வழங்களின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய வருமானத்தை உழைப்பதற்கு முடியாமல் இருந்தது. | அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>மேலும் சபையினால் அந்த சேவைவைய பெற்றுக் கொள்ளாத நிறுவனங்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் ஒழுங்குறுத்தல் சபையுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொங்கிரீட் பரிசோதனைக்காக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளாமல் 2018 பெப்ரவரி ரூபா 1.66 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான அமுக்கி இயந்திரமொன்று (crusher) காணப்படாமையால் Concrete Core Drilling உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் 2023 ஜுலை வரை விளைவற்று காணப்பட்டது. | 2019 ஆண்டு முதல் நாட்டில் நிலவிய பொருளாதார நிரந்தரமற்ற தன்மையின் காரணமாக அந்த உபகரணங்கள் இது வரை கொள்வனவு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் தலைமை அலுவலகம் நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட மாலபே காணிக்காக பணம் செலுத்தும் போது 2014 பெப்ரவரி 24 திகதிய 14/0277/526/002 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சபை நடாத்தப்பட்டு வந்த பழைய கட்டிடம் அமைந்துள்ள ஒருகொடவத்த காணிக்காக நகர அபிவிருத்தி சபைக்கு முன்வரும் காலத்திற்காக செலுத்தியிருந்த வாடகை ரூபா 7.66 மில்லியன் தொகையினை கழித்து | இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு போலவே வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டு சபைக்கு கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக வரிசை அமைச்சின் செயலாளரின் அறிவுரையின் | 1. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் அரசாங்க பெறுமதி மதிப்பீட்டின் படி மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும்.<br><br>2. சபைக்கு அறவிடப்பட |

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு கழித்து செலுத்தியிருக்கவில்லை. அதே போல் மாலபே காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 116 மில்லியன் தொகையும் 30 வருடங்களுக்கான வாடகைப் பெறுமதி ரூபா 75.5 மில்லியன் தொகையும் ஆகிய அரசாங்க பெறுமதி மதிப்பீட்டின் மீது கவனம் செலுத்தாமல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு மாலபே காணிக்காக 2015 ஆண்டின் போது ரூபா 181 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிந்தது. | படி குறிப்பிட்ட அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றிற்கு அழைப்பதற்காக விண்ணப்பித்து 2023.01.30 திகதி கடிதம் அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. இந்த சிக்கல் தொடர்பாக 2023 மே மாதம் 08 திகதி நடைபெற்ற பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை செயற் குழு கூட்டத்தில அறிவிக்கப்பட்டு அந்த குழுக்களுக்கு இந்த சிக்கலை அறிவிக்கும் படி வழங்கப்பட்ட அறிவுரையின் படி அதற்குரிய அறிக்கை ஒன்று அந்த குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | வேண்டிய தொகையினை அறவீடு செய்தவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்காக உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்று நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக 2020 ஜனவரி 08 திகதி முதல் செயற்படும் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட கருமங்கள் 90 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 செப்தெம்பர் வரை குறிப்பிட்ட கருமம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் 2022 மார்ச் அளவில் உடன்பட்டிருந்த மொத்தத் தொகையாகிய ரூபா 450,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மற்றும் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டது என கணக்காய்விற்கு சான்றுகள் காணப்படாததுடன் அரச பெறுகை வழிகாட்டல் 5.4.4 பிரகாரம் முற்பண பாதுகாப்பு முறி ஒன்று பெற்றுக் கொள்ளாமல் ரூபா 45,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அதே போல் உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 18 இன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 45,000 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | இலங்கை அணுசக்தி சபைக்காக உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்று நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக Cyber Concept Pvt Ltd நிறுவனத்திற்கு ரூபா 450,000 தொகைக்கு வழங்கப்பட்டதுடன், 2020.01.08 முதல் செயற்படுமாறு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு செயற்பட்ட போதிலும் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் காரணமாக குறிப்பிட்ட காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போன போதிலும் இரு தரப்பினரின் இணக்கத்துடன் செயற்பட்டமையால் தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை. | உடன்படிக்கைக் காலப் பகுதியுள் குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியிருந்துடன் அரச பெறுகை வழிகாட்டலின் மற்றும் உடன்படிக்கையின் நிபந்தனையின் படி செயற்பட வேண்டும். |